கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.

வழக்கு எண் MCOP. No. 293/2023 நாள்: 13.07.2026

ம.சா. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விமலா | ஊர் | : | கள்ளிப்பட்டி |
| கணவர் பெயர் | : | ஹரிராம் | தாலுகா | : | பெரியகுளம் |
| தொழில் | : | இல்லத்தரசி | வயது | : | 35/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**ர்மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் ர்மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 30.06.2023 ஆம் தேதியிட்டு தென்கரை காவல் நிலைய குற்ற எண்.253/2023 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1

2. 29.06.2023, 29.06.2023, 30.06.2023 ஆகிய தேதிகளிட்டு எனது அப்பா லெட்சுமணன் என்பவருக்கு பெரியகுளம், கா.விலக்கு, மதுரை அரசு

மருத்துவனைகளிலிருந்து வழங்கப்பட்ட விபத்து பதிவேடுகள் 3 எண்ணம் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 2

3. 30.06.2023 ஆம் தேதியிட்டு விபத்தில் சம்பந்தப்பட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகசரின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3

4. 30.06.2023 ஆம் தேதியிட்டு விபத்தில் சம்பந்தப்பட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4

5. 19.01.2024 ஆம் தேதியிட்டு விபத்து ஏற்படுத்திய TN 60 E 3325 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5

6.02.07.2023 ஆம் தேதியிட்டு என் தகப்பனார் லெட்சுமணன் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6

7. 02.07.2023 ஆம் தேதியிட்டு தென்கரை காவல் நிலைய குற்ற எண்.253/2023 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7

8. 15.07.2023 ஆம் தேதியிட்டு என் தகப்பனார் லெட்சுமணன் என்பவர் 02.07.2023 ஆம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்றிதழின் கணிணி நகல் ம.சா.ஆ. 8

9. 21.08.2023 ஆம் தேதியிட்டு இறந்த போன எனது தகப்பனார்லெட்சுமணன் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிழின் கணிணி நகல் ம.சா.ஆ. 9

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.07.13 17:58:58 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.